பக்கங்கள் 14+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 26 புதன்கிழமை 12.11.2025 | அதிர்வு 106

## கோர விபத்தில் பெண் ஒருவர் பரிதாபச் சாவு!

### இருவர் படுகாயம்

கம்பளை – கண்டி பிரதான வீதியில் கெலிஓயா, கரமட விகாரைக்கு அருகில் இன்று இடம்பெற்ற கோர விபத்தில் 02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# பல்கலைக்கழக வெற்றிடங்களை நிரப்புவதில் ஆளுந்தரப்பு எம்.பியின் அதிகாரத் தலையீடு!

## ஊழியர்கள் கடும் விசனம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கில் கடந்த அரசுகளின் ஆட்சிக் காலத்தைப் போலவே, அரச திணைக்களங்களில் ஆளுந்தரப்பின் அதிகாரத் தலையீடுகள் தொடர்வதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. குறிப்பாக டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்த காலத்தில் இடம்பெற்றது போல் நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகளில் ஆளுந்தரப்பைச் சேர்ந்த 02 ▶






AI photo

# வன்முறைக் கும்பலைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாகக் கைது

## நேற்றும் இருவர் வாள், கைக்குண்டு, ஹெரோயினுடன் சிக்கினர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பிரபல வன்முறைக் கும்பல் ஒன்றின் தலைவன் என அடையாளப்படுத்தப்பட்ட நபரும், அவரது சகாவும் நேற்று இணுவில் பகுதியில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது கைக்குண்டு மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் மற்றும் குற்றச்செயல்களுடன் 02 ▶

# யாழ். கிட்டு பூங்காவில் வெள்ளி ஆரம்பமாகும் ‘கார்த்திகை வாசம்’ நிகழ்வில் திருமாவளவன்



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வடக்கு மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு நடத்துகின்ற ‘கார்த்திகை வாசம்’ மலர்க்கண்காட்சி யாழ்ப்பாணம் – நல்லூர் கிட்டு பூங்காவில் (சங்கிலியன் பூங்கா) நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குஆரம்பமாகவுள்ளது.

இந்தத் தொடக்க விழாவில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான முனைவர் தொல். திருமாவளவன் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.


தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் 02 ▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# கைதான பிரசன்ன ரணதுங்கவுக்குப் பிணை!

இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரண துங்கவைப் பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு பிரதான நீதி வான் அசங்க எஸ். போதரகம உத்தர விட்டுள்ளார்.

அதன்படி, பிரசன்ன ரணதுங்கவை 50 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகள் மற்றும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிவான் உத் தரவிட்டுள்ளார்.



இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட நான்கு நிறுவ னங்களின் ஊழியர்களுக்கு, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து மருத்துவக் காப்புறுதி பெறப்பட்ட போது, ஒரு நிறுவனத்துக்கு அநியாய இலாபம் பெற்றுக்கொடுத்ததன் மூலம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு ரூ. 4,750,828.72 நட்டம் ஏற்படுத்திய தாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் இன்று காலை முன்னிலையாகி யிருந்த போது அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட பிரசன்ன ரண துங்க நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டதையடுத்துப் பிணையில் விடுவிக் கப்பட்டுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**யாழ். கிட்டு...**

தம்பிராசா யுகேஸ் தலைமையில் நடை பெறவுள்ள இந்தத் தொடக்க நிகழ்ச்சி யில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் மேனாள் தலைவர் பேராசிரியர் சி.சிவ லிங்கராஜா கலந்துகொள்கின்றார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தொடக்க உரையாற்ற, அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் இந்தக் கண்காட்சி இந்த மாதம் 23ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் முன்னிரவு 7.00 மணி வரை நடைபெறவுள்ளது.

கண்காட்சியைப் பார்வையிட வரும் மாணவர்களுக்கு வழமை போன்று இம்முறையும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இலவசமாக மரக்கன்றுகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வன்முறை..**

தொடர்புடைய குற்றச்சாட்டில் மேற் படி இருவரையும் கைது செய்து விசா ரணைகளை முன்னெடுத்த போது, வன்முறைக் கும்பலின் தலைவன் என அடையாளப்படுத்தப்பட்ட நபரின் உடை மையில் இருந்து 2 கிராம் 400 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளைப் பொலிஸார் மீட்டுள்ளனர். அத்துடன் அவரின் சகாவான மற்றைய இளைஞரின் உடைமையில் இருந்து கைக்குண்டு மற்றும் வாள் என்பவற் றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், இருவரையும் தொடர்ந்து 72 மணி நேரம் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு நீதிமன்ற அனுமதியைக் கோர பொலிஸார் நடவடிக்கை எடுத் துள்ளனர்.

இதேவேளை, கொழும்பு – கொட் டாஞ்சேனை பகுதியில் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் , தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு யாழ்ப்பாணம் வர உதவிய குற்றச்சாட்டில் யாழில் இயங்கும் வன்முை றக் கும்பல் ஒன்றுடன் தொடர்புடைய நபர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை 5 ஆயிரம் போதை மாத்திரைகள் மற்றும் வாளுடன் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசார ணைகளின் அடிப்படையில், அவரது சகோதரன் நேற்று 2 ஆயிரம் போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா கலந்து மாவா பாக்குடனும் கைது செய்யப்பட் டுள்ளனர்

அத்துடன், வத்தளையில் கார் ஒன் றில் கைதுப்பாக்கியுடன் பயணித்த போது கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்ட இருவரும் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்தவர்கள் எனவும், அவர்க ளுக்கும் யாழில் இயங்கும் வன் முறைக் கும்பல்களும் இடையில் தொடர்பு உள்ளது எனவும் பொலிஸார் தெரிவித் திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

**பல்கலைக்கழக...**

எம்.பி. ஒருவர் அதிகமாகத் தலை யீடு செய்கின்றார் எனக் கூறப்படுகின் றது.

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த 7 வருடங்களுக்கு மேலாக நிரப்பப்படா மல் இருக்கும் வெற்றிடங்களை நிரப்பு வதற்கான ஆளணி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதில் பெரும் இழுபறி நிலை காணப்பட்டு வந்தது. பல்கலைக் கழக ஊழியர் சங்கம் அதனைக் கண் டித்து எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை யும் முன்னெடுத்திருந்தது. அதன் பின் னணியில், பல்கலைக்கழகத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்குக் கடந்த வாரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனையறிந்த அரச தரப்பு எம்.பி ஒருவர், வெற்றிடங்களை நிரப்பும் போது, தனது அறிவுறுத்தல்களுக்கு அமைவாக வும், தன்னுடைய அனுமதியுடனுமே நியமனங்களை மேற்கொள்ள வேண்டும் என்று நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆளணி வெற்றிடங்களை நிரப்புவ தற்கான அனுமதியைப் பெறுவதற்கு உதவி செய்யுமாறு தாம் கோரிக்கை களை முன்வைத்த போது பாராமுக மாக இருந்து விட்டு, அனுமதி கிடைத் ததும் சம்பந்தமே இல்லாமல் மூக்கை நுழைக்கும் இந்தச் செயல் ஊழியர் களிடையே பெரும் விசனத்தை ஏற் படுத்தி இருக்கின்றது எனவும், முன்னைய ஆட்சிக் காலங்களைப் போலவே தனது உறவினர்களையும், நண்பர்களையும் ஆள்சேர்ப்பில் உள்நுழைக்க முயற்சிக் கும் இந்த எம்.பியின் செயல் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் மீது நம்பிக்கை இழக்க வைக்கின்றது எனவும் குறித்த ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

**கோர விபத்தில்...**

பெண் ஒருவர் பலியாகியுள்ளார்.

இந்த விபத்தில் சிறுமி உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர்.

நுவரெலியாவில் இருந்து கொழும்பை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோ ரத்தில் இருந்த கடை மீது மோதியுள் ளது.

அத்துடன், நிறுத்தி வைக்கப்பட்டி ருந்த ஓட்டோ ஒன்றையும் அந்த பஸ் மோதித் தள்ளி முன்சென்று, வீடொன் றின் மதில் மீது மோதி நின்றுள்ளது.

கடையில் இருந்த பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

ஐந்து வயது சிறுமி மற்றும் ஆண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பேராதனை வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் பேராதனை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.





# அரசால் முன்வைக்கப்பட்டுள்ள 'பட்ஜட்' யானை பசிக்கு சோளம் பொரி போன்றது!

## சிறிநேசன் எம்.பி. தெரிவிப்பு




(மட்டக்களப்பு நிருபர்)

அரசால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டம் யானைப் பசிக்கு சோளம் பொரி போன்றது என்று சிறிநேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

எனவே, வடக்கு – கிழக்கு மக்களின் ஏக்கம் எதிர்பார்ப்பு பெருமூச்சு என்பவற்றுக்கு இந்த வரவு – செலவுத் திட்டம் திருப்தி அடையக் கூடிய விதத்தில் நிறைவேற்றவில்லை. இருந்த போதிலும் யானை பசிக்கு சோளம் பொரி என்ற அடிப்படையில் சில விடயங்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்கிழமை(11) மட்டக்களப்பு செட்டிபாளையத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் மொத்த தேசிய உற்பத்தியில் துண்டு விழும் தொகை ஆறு தசம் ஐந்து விதமாக காணப்பட்டது, 2026 ஆம் ஆண்டு பார்க்கும்போது இந்த துண்டுகளும் தொகையானது மொத்த தேசிய உற்பத்தியில் 6.2 வீதமாக குறைவடைந்து இருக்கிறது. அது மாத்திரமன்றி நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் நான்கு தசம் எட்டு வீதமாக கணிக்கப்பட்டு இருக்கிறது. இதனைவிட வட்டி வீதம் நிதியின் உறுதித் தன்மையை வெளிப்படுத்தும் விதத்தில் எட்டு தசம் மூன்று விதமாக குறைக்கப்பட்டிருக்கின்றது.

இதனைவிட அரசின் உத்தியோக பூர்வமான ஒதுக்கீடுகளில் ஆறு தசம் சைபர் பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்திருக்கிறது. எனவே இந்த விடயங்களைப் புள்ளி விவரங்கள் இறுதியாக பார்க்கின்ற பொழுது அரசின் செலவினங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

விடயங்களை ஒட்டுமொத்தமாக பார்க்கின்றபோது வரவு – செலவுத் திட்டத்தில் ஒரு சாதகமான தன்மை காணப்படுவதாக கூறப்படுகின்றது.

ஊழலத்த தேசம் பாதாள உலக அமைப்பினர் இல்லாத தேசம், போதை வஸ்து இல்லாத தேசம், போன்ற எண்ணக் கருக்களின் அடிப்படையில் வரவு செலவுத் திட்டத்தில் உள்ள முன்மொழிவுகள் கூறப்பட்டிருக்கின்றன.

இவற்றைப் பார்க்கின்றபோது அனுகூலமான தன்மை இருப்பது போன்று காணப்படுகின்றது.

வடக்கு – கிழக்கு மக்கள் 30 ஆண்டு காலமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்கள், இன அழிப்புக்கு உள்ளானவர்கள் கைதிகளாக் கப்பட்டவர்கள், இவ்வாறான நிலைமைக்கு உருவாக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள்.

2009 ஆம் ஆண்டு சர்வதேசம் மிகவும் கேவலமான முறையில் பார்க்கக் கூடிய வகையில் யுத்தம் முடிவடைந்து இருக்கிறது. ராயப்பு ஜோசப் அவர்களின் கருத்தின்படி ஒரு லட்சத்து 46 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் காணாமலாக் கப்பட்டிருக்கின்றார்கள். அதுபோல் மிகவும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளில் இயக்கத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் பாலியல் வன்கொடுமைக்கு உட்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையத்தால் கூறப்பட்ட பொறுப்புகூறலின் அடிப்படையில் இறுதி யுத்தத்தில் ஏற்பட்ட புதைந்துள்ள உண்மைகளை கண்டறியப்பட வேண்டும். அதன் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரிகாரமான நீதியை வழங்க வேண்டும் மீண்டும் இவ்வாறான அவலங்கள் ஏற்படாமல் பாதுகாப்பான ஒரு அரசியல் தீர்வை காண வேண்டும் இந்த மூன்று விடயங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன.

யுத்தம் முடிவுக்கு 16 ஆண்டுகள் கழிந்திருக்கின்றன இவற்றை உள்நாட்டு பொறிமுறைகூட நாங்கள் செய்து முடிப்போம். என இலங்கை அரசு தெரிவிக்கின்றது. ஆனால், நடைமுறைச் செயற்பாட்டில் பார்க்கும் பொழுது இந்த 16 ஆண்டுகளில் எதுவும் சாதிக்கப்படவில்லை. சர்வதேச பொறிமுறையை விரும்பாதவர்கள் உள்நாட்டு முறை மூலமாக நீதியான ஒரு செயற்பாட்டை, தீர்வை, உண்மைகளை கண்டறியும் விடயத்தை இவர்கள் ஒரு மில்லி மீற்றர் கூட நகர்ந்து இருப்பதாக தெரியவில்லை.

வடக்கு – கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்குநீதி கிடைத்திருக்கின்றதா நியாயமான அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்டிருக்கின்றதா? எனப்படுகின்ற போது அது உண்மையில் மிகவும் வெட்கப்படக் கூடிய விதத்தில் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

வடக்கு – கிழக்கு மக்களின் பார்வையில் முன்வைக்கப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டத்தை மக்கள் திருப்தி அடையவில்லை எனினும் பொதுவான விடயங்களில் சில நல்ல விடயங்கள் இருக்கின்றனதான். எனவே வடக்கு – கிழக்கு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசம் கூடுதலான தடவைகள் புறக்கணிக்கப்பட்ட பிரதேசம் அந்தப் பிரதேசத்துக்கான விசேடமாக அதிகமான நிதி ஒதுக்கீடுகளை செய்யப்பட்டிருக்கின்றதா? என்று பார்த்தால் அவ்வாறு இல்லை.

ஆனால், மட்டக்களப்பு மாவட்டத்தைப் பார்த்தால் கிரான் பாலத்திற்கான ஆரம்பகட்ட வேலைகளுக்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது கித்துள் உறுகாமம் ஆகிய இரு குளங்களையும் இணைத்து மேற்கொள்ளப்படுகின்ற முந்தானை ஆற்று வேலைத் திட்டத்துக்காக முதற்கட்டமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. பொண்டுக்கல்சேனை பாலத்துக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. வாழைச்சேனை மீனவர் துறைமுகத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

மாறாக மாவட்டத்தின் படுவான் கரையும் எழுவாங்கரையை இணைக்கின்ற மண்டூர் குருமண்வெளி ஓடத்துறைக்குரிய பாலம், அம்பிளாந்துறை குருக்கள்மடம், ஓடத்துறைக்குரிய பாலம் கிண்ணையடி மற்றும் சந்திவெளி போன்ற ஆறுகளை ஊடகத்துக்கு செல்வதற்கான பாலங்களை அமைப்பதற்குரிய எந்த ஒரு விடயமும் இதில் சொல்லப்படவில்லை.

எனவே வடக்கு கிழக்கு மக்களின் ஏக்கம் எதிர்பார்ப்பு பெருமூச்சு என்பதற்கு இந்த வரவு செலவுத் திட்டம் திருப்தி அடையக் கூடிய விதத்தில் நிறைவேற்றவில்லை. இருந்த போதிலும் யானை பசிக்கு சோளம் பொரி என்ற அடிப்படையில் சில விடயங்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன.

காட்டு ஞானைகளின் அட்டகாசத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்குரிய செற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசு அமைத்துள்ள தொல்லியல் ஆணைக் குழுவில் அனைவரும் பௌத்த மதத்தை தழுவியவர்களாகவே இருக்கின்றார்கள், இது மஹிந்த ராஜபக்ஷவின் பாணி ஓட்டியதாக அமைந்துள்ளது இதுவும் கண்டிக்கத்தக்க விடயம். – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# உடலுழைப்பின் அவசியம்

தெற்காசியாவில் போதிய உடல் செயல்பாடுகளைக் கொண்டிராத மக்களைக் கொண்ட நாடுகளில் இலங்கை மூன்றாவது இடத்தில் உள்ளது என்பது உலக சுகாதார அமைப்பின் அறிக்கையின்படி தெரிய வந்துள்ளது.

உலகளாவிய உடல் பருமன் ஆய்வகம் மற்றும் உலக சுகாதார அமைப்பின் ஆய்வுகளின்படி, 18 வயதுக்கு மேற்பட்ட பெரியவர்களில் 37.2 சதவீதம் பேர் ஆரோக்கியமான வாழ்க்கைக்குத் தேவையான போதுமான உடல் செயல்பாடுகளில் ஈடுபடுவதில்லை.

2022 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பினர் நடத்திய ஆய்வில், பொதுவாகப் பெண்கள் ஆண்களை விட குறைவான உடல் செயல்பாடு விகிதத்தைக் கொண்டுள்ளனர். ஆண்களில் 28.7 சதவீதத்தினருடன் ஒப்பிடும்போது 44.8 சதவீதப் பெண்கள் போதுமான உடல் செயல்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை.

தெற்காசியாவில் போதுமான உடல் செயல்பாடு இல்லாதவர்கள் நாடுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. அங்கு மக்கள்தொகையில் 49.4 சதவீதம் பேர் உடல் ரீதியாக போதிய செயலற்றவர்களாக உள்ளனர். அதைத் தொடர்ந்து பாகிஸ்தான் 45.7 சதவீதத்துடன் உள்ளது.

இலங்கையில் சுகாதாரம் மற்றும் கல்வி அமைச்சகங்கள், உலக சுகாதார அமைப்புடன் இணைந்து 2024 இல் நடத்திய கூட்டு ஆய்வில், மாணவர்களிடையே மோசமான எடைக் கட்டுப்பாடு கண்டறியப்பட்டது. மாணவர்களில் 21.4 சதவீதம் பேர் எடை குறைவாகவும், 12.1 சதவீதம் பேர் அதிக எடையுடனும், 3 சதவீதம் பேர் உடல் பருமனாகவும் உள்ளனர். எடை குறைவாக இருப்பது பொதுவாக ஊட்டச்சத்து குறைபாட்டின் விளைவாகும். அதே சமயம் அதிக எடை மற்றும் உடல் பருமன் ஆரோக்கியமற்ற உணவை வழக்கமாக உட்கொள்வது, மோசமான உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் உடற்பயிற்சி இல்லாதமை ஆகியவற்றுடன் தொடர்புபட்டுள்ளது.

தேசிய ஊட்டச்சத்து மற்றும் நுண்ணூட்டச்சத்து கணக்கெடுப்பின்படி, இலங்கையில் கிட்டத்தட்ட 3 பெண்களில் ஒருவர் (29.6 சதவீதம்) அதிக எடை கொண்டவர்கள். மேலும் 18 முதல் 60 வரை வயதுடைய 8 பேரில் ஒருவர் (12.6 சதவீதம்) உடல் பருமன் கொண்டவர்கள். அதிக எடை மற்றும் உடல் பருமன் விகிதங்கள் 50-60 வயதுடைய பெண்களிடையே உள்ளன.

ஆய்வின்படி, 32 சதவீத ஆண்கள் அதிக எடை அல்லது பருமனாக உள்ளனர் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

எடை பருமன், போதிய செயற்பாடின்மை போன்றவை ஆரோக்கியமான சமூகக் கட்டமைப்புக்கு பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துவன. உணவுமுறை தொடர்பான தொற்றா நோய்களுக்கு அவையும் காரணமாகின்றன. உலகளாவிய ஊட்டச்சத்து அறிக்கையின்படி, உணவுமுறை தொடர்பான தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதில் உரிய இலக்குகளை அடைவதில் இலங்கை மட்டுப்படுத்தப்பட்ட முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது.

இலங்கைச் சமூகத்தவர்கள் உடல் உழைப்பையும் சற்றுத் தீவிரப் படுத்த வேண்டும் என்பதை இந்தப் புள்ளிவிவரங்கள் நமக்கு உணர்த்துகின்றன.



# குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் சாளம்பைக்கேணியில் வீதி புனரமைப்பு!



**(நூருல் ஹுதா உமர்)**

கிழக்கு மாகாண, அம்பாறை நாவிதன்வெளி பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட சாளம்பைக்கேணி -04 ஹிஜ்ரா வீதியின் 2 ஆம் குறுக்கு புனரமைப்பு பணிகள் நாவிதன்வெளிப் பிரதேச சபை தவிசாளர் இ.ரூபசாந்தனால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் சாளம்பைக்கேணி -04 ஹிஜ்ரா வீதியின் 2 ஆம் குறுக்கு வீதிக்கு கொங்ரீட் இடும் நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர்களான மு.பா.நவாஸ், மு.அ. நளீர் ஆகியோருடன் பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சு.ரஞ்சித் குமார் மற்றும் பிரதேச வாசிகளும் கலந்து கொண்டு அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

02 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும் இவ் வீதிக்கான கொந்தாரத்து ஒப்பந்த வேலைகள் அல்- உலூம் சனசமூக நிலையத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

நீண்ட நாள்களாக சேதமுற்று பாவனைக்கு பொருத்தமற்றதாக காணப்பட்ட இவ்வீதியானது மக்களின் கோரிக்கைக்கு அமைவாக அபிவிருத்தி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.






# அக்கரைப்பற்று அஹ்லுஸ் ஸுன்னாஹ் ஜும்ஆ பள்ளிவாசல் ஏற்பாடு செய்த இரத்ததான முகாம்





(றிஸ்வான் சாலிஹு)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியில் உள்ள இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுமுகமாக அக்கரைப்பற்று அஹ்லுஸ் ஸுன்னாஹ் ஜும்ஆ பள்ளிவாசல் ஏற்பாடு செய்த மாபெரும் இரத்ததான முகாம் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர்

மௌலவி. அப்துல்ஹமீட் (ஷரயி) தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (09) அஹ்லுஸ் ஸுன்னாஹ் ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது.

இரத்ததான முகாமில் சுமார் 100இற்கும் அதிகமான ஆண், பெண்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு எந்த இனத்தவராக இருந்தாலும் பிற சகோதரர் உயிர் வாழ வேண்டும் என்ற நல்நோக்கத்துக்காக தங்களது உதிரங்களை தானமாக வழங்கினார்கள்.

இப்பிராந்தியத்திலுள்ள தலசீமியா குழந்தைகள், சிறுநீரக நோயாளிகள், கர்ப்பிணி பெண்கள், வீதி விபத்துக்களில் சிக்குண்ட நோயாளிகள் மற்றும் அவசியமாக இரத்தம் தேவைப்படும் நோயாளிகளுக்கு வழங்கவே இவை பெறப்படுவதாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி பிரிவு தெரிவித்தது.

அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைகளில் நிலவும் இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக கடந்த சுமார் 15 வருடங்களாக இப்பள்ளிவாசல் நிர்வாகத்தால் தொடர்ச்சியாக இவ்வாறான இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு அத்தேவையை முடியுமானவரை நிவர்த்தி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# கல்வி அமைச்சின் வட்டியில்லா கடன் திட்டத்தில் உயர் கல்விக்கு மாணவரை உள்ளீர்க்க முடிவு





(ஹஸ்பர் ஏ.எச்.)

கல்வி அமைச்சின் வட்டியில்லா கடன் திட்டத்தின் மூலம் உயர் கல்விக்கு மாணவர்களை உள்ளீர்ப்பு செய்வது தொடர்பான தெளிவூட்டல் நிகழ்ச்சி திட்டம் நேற்று (11) திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கல்வி அமைச்சினுடைய உயர் கல்விப் பிரிவின் 2022, 2023, 2024ஆம் ஆண்டுகளில் க.பொ.த. உயர்தர பரீட்சை எழுதி இலங்கையின் அரச பல்கலைக் கழகங்களில் அனுமதி கிடைக்காது, பரீட்சையில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்து பொது அறிவு பரீட்சையில் 30 புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்களை இலங்கையிலுள்ள பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 18 தனியார் பல்கலைக் கழகங்களில், இலங்கை அரசின் அனுமதி பெற்ற இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் கல்விக் கடன் திட்டத்தின் ஊடாக, அதாவது வட்டியில்லாக் கடன் திட்டத்தின் ஊடாக அவர்களுக்கான உயர்கல்வி வாய்பபை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது தொடர்பான தெளிவூட்டல் நிகழ்ச்சி திட்டமே இதுவாகும்.

இதன்போது மாணவர் கடன் பிரிவு உதவிப் பணிப்பாளர் கே.வி.எம். சதுரங்கனி, அரச சார்பற்ற உயர்கல்வி பிரிவு உதவிப் பணிப்பாளர் சஜினி விஜேசிறிவர்தன, திறன் மற்றும் தொழிற் கல்விப் பிரிவு மாவட்ட இணைப்பாளர் கே. மதுரன், துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# மீண்டும் பாரிய கடலரிப்பில திருக்கோவில் பிரதேசம்!




**(வி.ரி.சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசம் மீண்டும் பாரிய கடலரிப்பை சம காலத்தில் சந்தித்து வருகிறது.

அதனால் கரையோர 7000 குடும்ப மக்கள் பெரும் ஆபத்தை எதிர் நோக்கி வருகிறார்கள்.

கடந்த ஐந்து வருட காலத்திலே கடல் அரிப்பினால் இப்பிரதேசம் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறது .கடந்த ஐந்து ஆண்டுகளில் பல முயற்சிகள் எடுத்தும் பலனளிக்கவில்லை.

கடந்த மூன்று வருட காலத்தில் கரையோரத்தில் இருந்த பாதை அழிக் கப்பட்டு மீனவர் கட்டடம் குருகுலம் மற்றும் சிறுவர் இல்லக் கட்டடங்கள் முழுமையாகச் சேதமாகின.

சித்திர வேலாயுத சுவாமி ஆலய முன்றலில் பாரிய அரிப்பு ஏற்பட்டு வீதி தொடக்கம் வாடிகள் தென்னை மரங்கள் கிணறுகள் கடலுக்குள் சங்கமமாகி உள்வாங்கப் பட்டிருக்கின்றன.

சித்திர வேலாயுத சுவாமி ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுந்தர லிங்கம் சுரேஷ் உள்ளிட்ட குழுவினர் அங்கு சென்று பார்வையிட்டனர்.

ஆனால் இந்தத் திருக்கோவில் ஆலயம் முன்பாக 50 தொடக்கம் 75 மீட்டர் கூட இல்லாத ஒரு கல்லணை யைத் தவிர வேறு எந்த ஒரு தடுப்பு நடவடிக்கையும் நடைபெறவில்லை.

2025 ஆம் ஆண்டில் இப்பொழுது சுமார் மூன்று மீற்றர் நீளம் அளவிலே கடலில் உள்வாங்கப்பட்டு பல மலசல கூடங்கள் கிணறுகள் உள்வாங்கப் பட்டுள்ளன.





# கல்முனை இஸ்லாமாபாத் மாணவர்கள் பிரதேச ரீதியிலான போட்டிகளில் சாதனை

**(நூருல் ஹுதா உமர்)**

தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தின் கல்முனைப் பிரதேச செயலகப் பிரிவினால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் மாணவர்கள் 10,000 மீற்றர் ஓட்டப்போட்டியில் பங்குபற்றி இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றனர்.

அத்துடன் 400 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டு மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அதிதிகளால் சான்றிதழ் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டன.




# 31 நாள்களில் 31 நூல்கள் வெளியிட்டு ஜீவநதி படைக்கும் வரலாற்று சாதனை!




(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

ஈழத்து இலக்கிய வரலாற்றில் இரண்டாவது தடவையாக (2024, 2025) வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஐப்பசி மாதம் 31 நாள்களும் ஒவ்வொரு நூல்களை ஜீவநதி பதிப்பகம் வெளியீடு செய்துள்ளது.

ஈழத்து இலக்கிய வரலாற்று பணியில் ஜீவநதி படைக்கும் வரலாற்று சாதனை மிகக் காத்திரமானது. 31 நாள்களில் 31 நூல்கள் வெளியீட்டு உலகளாவிய ரீதியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த ஆண்டு 2025 வெளியீடு செய்த நூல்களில் புயலுக்குப் பின்னர் – தமிழ்கவி, மழைக்கால மேகம் – இராஜினி தேவி சிவலிங்கம் ஆகியன நாவல்களாகும்.

அத்துடன் சிறுகதை தொகுப்புகளாக இருகப்பிகள் – பா.வேதநாயகம், அவளுக்கென்று ஓர் உலகம் – சுடரி, மாடி வீடும் ஒரு தென்னை மரமும் – திக்குவல்லை கமால் எழுதிய நூல்களும் வெளிவந்துள்ளன.

2025 ஐப்பசி நூலக மாதத்தை முன்னிட்டு ஜீவநதி 31 நாளும் நூல்களை வெளியீட்டு இளம் எழுத்தாளர்களுக்கு பெரும் களம் அமைத்து வருகிறது.

மேலும் கண்ணீரில் பிறக்கும் கடல் – 21 பெண்களின் பெண்ணியக் கவிதைகள் தொகுப்பு ஆசிரியர் க.பரணீதரன், காதலின் கார்காலம் – சங்கரி சிவகணேசன், போர் ஆற்றில் நனைந்த பெண் – 11 பெண்களின் போரும் பெண்களும் கவிதைத்தொகுதி – தொகுப்பாசிரியர் க.பரணீதரன், இரு உலகம் பல மனிதர் – ஆகசி கந்தசாமி, தென்றலின் சிறகுகள் – இந்ரா, உணர்வெழுதும் தூரிகை – தேயிலை தேசத்தவள், காற்றுக்கும் வேர்க்கும் – மீரா சிவகாமி, பல்வித கவிதைச் சோலை – பா .வேதநாயகம் ஆகியோரின் கவிதை தொகுப்புகள் வெளிவந்துள்ளன.

நாடக நூல்களாக நேரகாலம் – குழந்தை ம.சண்முகலிங்கம், ஓட்டாண்டிகள் – குழந்தை ம.சண்முகலிங்கம், இடுக்கண் வருங்கால் – குழந்தை ம.சண்முகலிங்கம் போன்ற தொகுதிகளும் வெளிவந்துள்ளன.

மற்றும் வாய் மொழி வரலாறு நூல்களாக யோகேஸ்வரி சிவப்பிரகாசம், சிதம்பரநாதபிள்ளை திருச்செந்திநாதன், அலியார் பீர் முஹம்மது, விசுவாசம் ஜெகநாதன், நாராயண பிள்ளை யோகேந்திரநாதன் ஆகியோர் எழுதிய நூல்கள் வெளிவந்துள்ளன.

கட்டுரை தொகுதிகள் விமர்சன நூல்களில் மணம் கமழும் எமது முற்றத்து மலர்கள் – என். செல்வராஜா, படைப்பியல் நோக்கில் பார்வையும் பதிவுகளும் – மு.அநாதரட்சகன், மணம் கமழும் எமது முற்றத்து மலர்கள் தொகுதி –2 – என். செல்வராஜா, உருமாறும் பழமொழிகள் – என். செல்வராஜா, இலக்கிய உலா – பகவதாஸ் ஸ்ரீஸ்கந்ததாஸ், உலக கலை இலக்கிய தத்துவ வெளி – மு.அநாதரட்சகன், நினைவழியா நூல்கள் – புலோலியூர் ஆ.இரத்தினவேலோன், ஈழ மண்ணில் இந்திய இராணுவம் நூல் வழிப்பதிவுகள் – என்.செல்வராஜா எழுதிய கட்டுரைகள் தொகுப்பு நூல்களாக வெளிவந்துள்ளன.

அத்துடன் சிறுவர் நாவலான பி. திக்குவல்லை கமால் எழுதிய பூரித்த பொன் வனம் என்ற நாவல் வெளிவந்துள்ளது. அத்துடன் அவலை நினைத்துக்கொண்டு – விவாத தொகுப்பு நூலை க.பரணீதரன் எழுதியுள்ளார்.

இந்த 31 நூல்களில் பல மனதுக்கு நிறைவை தந்துள்ளன. ஈழத்தில் முதன் முதல் வாய் மொழி வரலாறுகளை நூல்கள் ஆகிய பெருமை ஜீவநதியை சாரும். அந்தவகையில் இந்த ஆண்டும் 5 வாய் மொழி வரலாறுகள் வெளியாகி உள்ளன. அதன் படி மொத்தம் 10 வாய்மொழி வரலாறுகள் நூலாகியுள்ளன.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் அவலை நினைத்துக் கொண்டு – முதன் முதல் வெளி வரும் விவாத நூலாகும்.

தென்றலின் சிறகுகள், உணர்வெழுதும் தூரிகை போன்ற நூல்கள் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரது முதல் தொகுதி ஆகும். காற்றுக்கும் வேர்க்கும் – பல்கலைக்கழக காலத்தில் இருந்து கவிதை புனையும் 50 வயதை தாண்டிய மீரா சிவகாமியின் முதல் நூல்

இரு உலகம் பல மனிதர் – மல்லிகையில் 1972 களில் எழுத ஆரம்பித்த ஆகசி கந்தசாமியின் முதல் நூலாகும். பாவிலுப்பிள்ளை வேதநாயகம் என்ற அண்ணாவியார் சிறுகதைகள் , கவிதைகள் நாடகம் பல எழுதி பிரதேச மாவட்ட மட்ட போட்டிகளில் முதல் இடங்களை பெற்றும் நூல் ஆக்க முடியாமல் இருந்தார். அவரது இரு கப்பிகள், பல்வித கவிதை சோலை என இரு நூல்கள் வெளியாகி உள்ளன.

அத்துடன் இராஜினி தேவி சிவலிங்கத்தின் முதல் நாவலாக – மழைக்கால மேகம் வெளியாகிறது. சுடரியின் முதல் சிறுகதை தொகுப்பு அவளுக்கென்று ஓர் உலகம். இவ்வாறு ஜீவநதி தன்னால் இயன்ற இலக்கிய பணிகளை செய்வதுடன், இலை மறை காயாய் இருப்பவர்களை வெளிச்சத்துக்கு கொண்டுவர முயல்கிறது.

இந்தநூல்வெளியீடுகளுக்குதி.கோபிநாத், நந்தன் தர்மபாலன் போன்ற தமிழ் ஆர்வலர்களின் பங்களிப்பு காத்திரமானது என்று ஜீவநதி பதிப்பக பரணிதரன் தெரிவித்துள்ளார்.





# கொட்டகலை பிரதேச சபையின் ‘பட்ஜட்’ ஏகமனதாக நிறைவேறியது

(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ் )

2026 ஆம் ஆண்டுக்கான கொட்டகலை பிரதேச சபையின் வரவு – செலவுத் திட்டம் கௌரவ சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நேற்று கொட்டகலை பிரதேச சபையின் நவம்பர் மாதத்துக்கான மாதாந்த சபைக் கூட்டமானது கொட்டகலை பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் கௌரவ தலைவர் இராஜமணி பிரசாந்த் தலைமையில் உப தலைவர் மற்றும் கௌரவ உறுப்பினர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

இந்தச் சபைக் கூட்டத்தில் கொட்டகலை பிரதேச சபையின் 09 ஆவது வரவு – செலவுத் திட்டமான 2026 ஆம் வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டு 2026 ஆம் ஆண்டுக்கான கொட்டகலை பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் கௌரவ சபையால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பிரதேசத்தில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

# புலமைச் சாதனையாளர் கௌரவிப்பு!



(றிபாஸ்)

ஒரு பாடசாலை, சிறந்த அடைவுகளை பெற்றுக்கொள்ள அதிபர், ஆசிரியர்கள் மட்டுமல்ல, அந்தப் பாடசாலையின் பலம்மிக்க பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் அவசியமாகும். இதற்கு மருதமுனை அல் ஹம்றா வித்தியாலயம் நல்லதோர் சான்றாகும் என்று கல்முனை வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம்எச்.எம். ஜாபீர் தெரிவித்தார்.

மருதமுனை அல் – ஹம்றா வித்தியாலய தரம் 5 புலமைச் சாதனையாளர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் எம்.எம்.முகம்மது நியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி எம். எச்.றியாஸா,எம். எல். எம்.முதர்ரிஸ், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு செயலாளர் ஐ.மர்ஸாத், பழையமாணவர் சங்க உபதலைவர் நழீம், அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.






# வடக்கில் அரச தாதியர்கள் 24 மணிநேரப் பகிஷ்கரிப்பு

## நோயாளர்கள் பெரும் அசௌகரியம்










(எஸ்.ஆர்.லம்பேர்ட்)

வடக்கு மாகாணத்தில் இன்று காலை முதல் 24 மணி நேர வேலை நிறுத்தப் போராட்டத்தை அரச தாதியர்கள் ஆரம்பித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான வருகை மற்றும் புறப்படும் பதிவுக்காக ஏனைய ஊழியர்களுடன் சேர்த்து ஒரே கையொப்பப் பதிவு புத்தகம் பயன்படுத்துதல் என்ற முடிவுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் இந்த 24 மணி நேர வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அமைவாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தர்கள் ஆதரவு தெரிவித்து பணிப் பகிஸ்கரிப்பை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த அநீதியான முடிவு தாதியர் சேவையின் கௌரவத்துக்கும் தனித்துவத்துக்கும் பங்கம் விளைவிக்கும் என்பதை கருத்தில் கொண்டு குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனால் தாதிய உத்தியோகத்தர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வடமாகணத்தில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் இன்று புதன்கிழமை (12) காலை 7 மணிக்கு போராட்டத்தை ஆரம்பித்தனர். நாளை வியாழக்கிழமை (13) காலை 7 மணி வரை குறித்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

குறித்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் அடையாள பணிப் பகிஸ்கரிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் மாவட்ட பொது வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவில் நோயளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

வைத்திய சேவைகள் இடம்பெற்ற போதும் தாதிய உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்படும் சேவைகள் முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளமையால் நோயாளிகள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மேலும் தூர இடங்களில் இருந்து வருகை தந்த நோயாளர்களும் ஏமாற்றத்துடன் திரும்பியமையும் குறிப்பிடத்தக்கது.



# வேரறுக்கப்படும் இயற்கை அரண்கள்!

**செ.அனுத்திரா,**
**ஊடக கற்கைகள் துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

ஊருக்கு புறப்பட்டு அடிச்சு பிடிச்சு யாழ்ப் பாணத்தில் இருந்து முல்லைத்தீவு புறப்படும் பஸ்ஸில் ஏறினேன். ஜன்னல் பக்கத்தில் இருந்து ரசித்துக் கொண்டு செல்வது வழக்கம். மழை காலம் ஆரம்பித்து நீண்ட நாள்களின் பின்னர் செல்வதால் வீதியை பார்க்கவே பச்சை பசேல் என ஒருவித அழகை தந்தது.

நவம்பர் மாதம் எனில் சொல்லவா வேண்டும் அதிலும் முல்லைதீவு செல்லும் வழியில் இரு மருங்கிலும் வயல்வெளிகள். மூங்கிலாறு வளைவு மிகவும் அழகாக இருந்தது. அதன் அழகே தனிதான் வளைந்த வீதியில் பேருந்து வளைந்து வளைந்து செல்லும்போது வீதியின் இருமரங்கிலும் தேக்கு மரங்கள் அரண்களாக அமைந்திருக்கும் அதன் அழகு வியக்க வைக் கின்றது. அதனை பார்வையிடுவதற்காகவும், புகைப்படங்கள் எடுப்பதற்காகவும் பலர் வருகை தருவதும் உண்டு.

வீட்டுக்கு சென்று அப்பாவிடம் கேட்டேன் “என்ன அப்பா எங்கட வீட்டுக்கு பின்னால இருக்குற தேக்கம் காட்ட மாதிரி மூங்கிலாறு வளைவில வீதி ஓரங்கள் அழகாக இருக்கு. இதெல்லாம் எப்படி வளர்ந்து இருக்கும்” நீண்ட நாள் கேட்கவேண்டும் என நினைத்த கேள்விதான். “அது எங்கட போராளிகள் உருவாக்கின மரங்கள் அவர்கள் இருக்கும் வரைக்கும் இயற்கை வளங்களை அழிக்காமல் பாதுகாத்தவங்க. தேக்கங் காடுகளே இல்லாமல் போயிட்டு இப்ப. இந்த பின்னாலயும் எல்லாம் வெட்டி எடுத்திட்டுதுகள். வெளியால பாக்கத்தான் தேக்கங்காடு மாதிரி இருக்கு கொஞ்ச தூரம் போய் பார்த்தால் நிறைய மரங்களை தறிச்சிட்டாங்க. எல்லாம் அழிந்து கொண்டு போகுது” என மூச்சு விடாமல் கூறி முடித்தார் அவர் முகத்தில் கோபமும் கவலையும் தெரிந்தது

“நாடென்ப நாடா வளத்தென நாடல்ல” எனும் வரிகளுக்கு இணங்க மரங்கள், இயற்கை வளங்களை கொண்டிருப்பது நாடு அவை இல்லா விடின் அது வாழ்வதற்கான சூழலை கொண்டிராது. இந்தப் பிரபஞ்சத்தில் பல கோள்கள் இருந்தாலும் ஏன் நாம் அங்கு சென்று வாழ முடியவில்லை என நினைத்து பார்த்தால் காரணம் உயிர் வாழ முடியாத சூழல். புல், பூண்டு கூட இல்லை எனில் எவ்வாறு வாழ முடியும். இலங்கையில் அதிகரித்து வரும் சனத் தொகைக்கு ஏற்ப மூன்றில் ஒரு பங்கு காடுகளாக இருக்க வேண்டும். ஆனால், காடுகள் தெரிந்தும் தெரியாமலும் படிப்படியாகக் குறைந்து வருகின்றது. வடமாகாணத்தை பொறுத்தவரையில் குறித்த காலப் பகுதியில் அதிகளவான மரங்கள் நடப்பட்டது அனைவரும் தெரிந்த விடயமே.

விதைகள் நிலத்தில் மண்ணுடன் போராடி நிலத்தை பிளந்து வருகின்றன. சிறிய புற்களாக இருந்து புதராகி பின்னர் மரமாகி காடுகளாக வளர்கின்றன. அவற்றை தேடி உயிரினங்களும் வந்துவிடுகின்றன. மரங்கள் அவற்றுக்கான சூழ லில் மகிழ்ச்சியாக செழித்து வளர்கின்றன. ஒரு மனிதனின் ஆயுள் காலத்தை விட மரங்களின் ஆயுள் காலம் ஆயிரத்தை தாண்டிச் சென்றாலும் மனிதர்கள் ஏற்படுத்தும் பாதிப்பால் காடுகள்,எ மரங்கள் அழிக்கப்படுகின்றன.

மரங்கள் பல வகையாக இருந்தாலும் அவற்றுக் கான தேவையும் அதிகரித்துள்ளது. நில பற்றாக் குறையை தீர்ப்பதற்கு, பசுந்தளை உரத்துக்கு, கால்நடை தீவனத்துக்கு, விறகுக்கு கட்டுமான பொருள்களுக்கு, மருந்துப் பொருள்களுக்கு, காகித தயாரிப்புக்கு, பஞ்சுக்கு, தீப்பெட்டி தொழில், தோல் பதனிடல், மை தயாரிக்கவும், நார் எடுக்க, பூச்சி மருந்துகளாக பயன்படுத்த, ஆலயத்தை அழகுபடுத்த, மேச்சல் நிலமாக, சாலை ஓரங் களில் வேலியாக நடுதல் என அவற்றால் மனி தன் அடையும் பயன்கள் ஏராளம்.

முல்லைத்தீவு பகுதியில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டதன் பின்னர் அவற்றின் பலனை

**தொடர்ச்சி▼**

# வேரறுக்கப்படும் இயற்கை அரண்கள்!

**தொடர்ச்சி▲**

மக்கள் முழுமையாக அனுபவிக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போனதால் மரங்கள் படிப்படியாக அழிக்கப்பட்டன. அதிலும் உள்ளூர் உற்பத்திகள் ஊக்குவிக்கப்படாமையால் மக்கள் அவற்றை அழித்து தென்னை மரங்களை நட்டனர். இதனால் பிரதேசத்துக்கே ஆன மாமரங்கள், பாலமரம், கொய்யா மரம், நாவல் மரம், மஞ்சவுண்ணா, ஆமணக்கு, இளவம்பஞ்சு மரம், பனைமரம், முதிரை, வேம்பு, பூவரசுமரம், முள் முருங்கை, அரச மரம், வில்வமரம் என பழகிய மரங்களைக் காணமுடியாத நிலை.

சிறுவயதில் பள்ளிக்குச் செல்கின்றபோது வீதியில் நிற்கும் முனி நாவல் மரம், வேப்ப மரம் என அவற்றின் பழங்களை உண்டு, இளைப்பாறி மரத்தில் ஏறி விளையாடி வீட்டுக்கு செல்லுகின்ற போது மாலை மூன்று, நான்கு மணி ஆகிவிடும். ஆனால் அவ்வாறு வீதி ஓரங்களில் மரங்களை தற்போதைய சிறுவர்கள் காண்பதற்கு அவர்களுக்கு கொடுத்து வைக்கவில்லை.

சட்டவிரோதமாக மரம் வெட்டுதலால் இயற்கையான வளங்கள் அழிவடைகின்றன. சிறிய மாற்றமும் முன்பின் அறியாத விளைவைக் கொண்டு வரும் அவ்வாறே மிருகங்கள் வீதியோரம், குடியிருப்புகளுக்கு வருவதால் விபத்துக்கள் சிக்குவதோடு சேதங்களையும் ஏற்படுத்துகின்றன.

காடுகளில் பல வகையான மிருகங்கள், செடிகள், கொடிகள், புல்,பூண்டுகள், மண்வாழ் உயிரினங்கள், பறவைகள் என உயிர் பல்வகை நிறைவாக காணப்படுகின்றது. உயிர் இனங்களின் உணவிற்காகவும் வாழிடமாகவும் உள்ளது. மண்வாழ் உயிரினத்தை பாதுகாத்தல், நிலத்தடி நீரை பாதுகாத்தல், நீர் சுழற்சியை கட்டுப்படுத்துதல், வேலை வாய்ப்பு பெறுதல், பல்லுயிர் பெருக்கம் அதிகரிப்பு, மண்ணின் தரம் உயர்த்துதல்,நிலப்பாதுகாப்பு, புவி வெப்பமடைதல் குறைத்தல், ஒட்சிசனை உற்பத்தி செய்து காபனீரொக்சைட்டை சூழலில் இருந்து அகற்றுகின்றது.

மரங்களை அழிப்பதால் எவ்வாறான பாதிப்பு ஏற்படும் என்று பார்க்கும்போது உயிரினங்களின் வாழ்விடம் அழிக்கப்படல், கால நிலை மாற்றம், மற்றும் புவி வெப்பமாதல், நீர் சுழற்சியில் மாற்றம், சமுக பாதிப்புகள், வெள்ளம், மண் அரிப்பு,விலங்கு உயிர் பாதிப்பு, மருத்துவத்திற்கு தட்டுப்பாடு ஏற்படல், பாரம்பரிய நம்பிக்கை அழிவடையும், மரத்தோடு மக்கள் உறவாடுகின்ற வாய்ப்பு இல்லாமல் போதல், மரங்களின் இனம், அவற்றினுடைய சிறப்பு தன்மை அழிவடையும். இன்னொரு நாட்டில் கை ஏந்த வேண்டிய நிலை ஏற்படும். வலிமையான செயல்பாடு பாதிப்பு பறவைகளின் வாழ்விடம் பாதிப்பு, நச்சு வாயுக்கள் பரவுதல் பாலைவனமாதல் என விளைவுகளை எதிர் கொள்ள வேண்டும்.

மாற்று ஏற்பாடாக நிலையான ஒரு ஒழுங்கு முறை கட்டுப்பாட்டை கொண்டு வருதல், மாற்று மரங்களை நாட்டுதல், விவசாய முறைகளை மாற்றம் செய்தல் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கூட்டுறவு அமைப்புகள், மாதர் அமைப்புகள், லயங்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரரையும் இணைத்துக் கொண்டு செயற்படல்.

சட்டங்கள் என்கின்ற போது வனப் பாது காப்புக் கட்டளைச் சட்டம் (Forest Conservation Ordinance) பாதுகாப்பு சட்டம், வன பாதுகாப்புத் திணைக்களம் வன ஜீவராசிகள் திணைக்களங்கள் செயற்படுகின்றன. அவற்றின் செயற்பாடு அதிகரிக்க வேண்டும். காரணம் அவதானித்த வரையில் மரம் வெட்டுதல், மண் அகழ்வு நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது.

கார்த்திகை மாதத்தில் சுற்றுச்சூழலை மேம்படுத்துதல் மற்றும் தமிழ் தேசியத்தின் அடையாளத்தை வலுப்படுத்தவும் சொந்த மண் சொந்த மரங்கள் என்ற கருப்பொருளில், ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம் என்ற மகுடவாசகத்தைக் கொண்டு வடமாகாணம் முழுவதும் கார்த்திகை மாதத்தில் மரம் நடுகை மேற்கொள்ளப்படுகின்றமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

## அனைத்துலக மருத்துவ நல அமைப்பால்

# வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு ரூ.48.4 மில். பெறுமதியில் லேசர் இயந்திரம்

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் ஊடாக 48.4 மில்லியன் ரூபா பெறுமதியில் கண் சிகிச்சைக்கான லேசர் இயந்திரத் தொகுதி கையளிக்கப்பட்டுள்ளது என்று மஸ்கெலியா அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கந்தையா விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில்,

கடந்த வெள்ளிக்கிழமை (17) வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு ARGON மற்றும் YAG ஆகிய புதிய இயந்திரத் தொகுதிகள் வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி, மாவட்ட வைத்திய சாலை பணிப்பாளர் வைத்தியர் நிலக்சன் கண் வைத்திய சத்திர சிகிச்சை ஆலோசகர் வைத்தியர் கிரிதரன் உள்ளிட்ட குழுவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரங்களின் ஊடாக நோயை இனங்காணுதல், சிகிசையளித்தல் போன்றவற்றை இலகுவாக மேற்கொள்ள முடியும். குறிப்பாக நீரிழிவு, மற்றும் பிற நோய்களால் கண் பார்வை இழக்கக் கூடிய நோயாளிகளைப் பூரணமாகக் குணப்படுத்த பேருதவியாக இது இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துலக மருத்துவ நல அமைப்பானது ( International Medical Health Organization ) பல நாடுகளில் தொண்டு நிறுவனமாக செயற்பட்டு வருவதோடு, இலங்கையில் கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# டில்லி கார் குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் 42 முக்கிய தடயங்களைச் சேகரித்த என்.ஐ.ஏ.





டில்லி கார் குண்டுவெடிப்பு தாக்குதலில் பாகிஸ்தானின் ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்புக்கு தொடர்பு இருப்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது. குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடத்தில் தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ) அதிகாரிகள் நேற்று 42 முக்கிய தடயங்களை சேகரித்தனர்.

டில்லி செங்கோட்டை அருகே உள்ள சிக்னலில் நேற்று முன்தினம் மாலை ஒரு கார் வெடித்துச் சிதறியது. இதில் 13 பேர் உயிரிழந்தனர். வீதியில் வெடித்து சிதறிய காரை, காஷ்மீரின் புல்வாமா பகுதியை சேர்ந்த மருத்துவர் உமர் முகமது நபி என்பவர் செலுத்தி வந்துள்ளார். குண்டுவெடிப்பில் அவர் உடல் சிதறி உயிரிழந்தார். அவரும் ஹரியானாவின் அல் பலா மருத்துவக் கல்லூரியில் மருத்துவராக பணியாற்றி வந்தார்.

அந்த மருத்துவக் கல்லூரியில் சக மருத்துவர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் உமர் முகமது நபி, வெடி பொருள்கள் நிரப்பப்பட்ட தனது காரில் டில்லிக்குள் நுழைந்துள்ளார். பொலிஸ் சோதனையில் இருந்து தப்பிக்க கார் இன்ஜின் பகுதியில் அவர் வெடி பொருள்களை மறைத்து வைத்திருந்தார். இனிமேல் போலீஸ் பிடியில் இருந்து தப்ப முடியாது என்பதை உணர்ந்த மருத்துவர் உமர் முகமது நபி பதற்றத்தில் டில்லி செங்கோட்டை அருகே தற்கொலை தாக்குதல் நடத்தி உள்ளார்.

இதுகுறித்து டில்லி பொலிஸார் கூறும்போது, "டில்லி குண்டுவெடிப்பில் பாகிஸ்தானின் ஜெய்ஷ் இ முகமது அமைப்புக்கு தொடர்பு இருக்கிறது. தற்கொலை படை தீவிரவாதியாக செயல்பட்ட உமர் முகமது நபி உட்பட கைதான அனைத்து மருத்துவர்களும் அந்த அமைப்பின் தீவிர உறுப்பினர்களாக இருந்துள்ளனர். புனிதமான மருத்துவத் தொழிலில் கலந்திருந்த தீவிரவாத மருத்துவ கும்பல், உளவுத் துறையின் எச்சரிக்கையால் சிக்கி உள்ளது." என்று தெரிவித்தனர்.

இந்த வழக்கு நேற்று தேசிய புலனாய்வு அமைப்புக்கு (என்.ஐ.ஏ) மாற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து டில்லி செங்கோட்டை அருகே குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடத்தில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் நேற்று 42 முக்கிய தடயங்களை சேகரித்துள்ளனர்.

# வெற்றிக் கோப்பை சின்னம் கேட்டு தமிழக வெற்றிக் கழகம் மனுத் தாக்கல்

ஆட்டோ, கிரிக்கெட் 'பட்', விசில், வெற்றிக் கோப்பை உள்ளிட்ட சின்னங்களில் ஒரு சின்னத்தை ஒதுக்குமாறு தேர்தல் ஆணையத்தில் த.வெ.க. நிர்வாகிகள் மனு அளித்துள்ளனர்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்களே இருப்பதால், தமிழக வெற்றிக் கழகம் தலைவர் விஜய் பல்வேறு வியூகங்களை வகுத்து வருகிறார்.

சமீபத்தில் நடைபெற்ற த.வெ.க. பொதுக்குழு கூட்டத்தில் முதல்வர் வேட்பாளர் விஜய் தான் எனவும், கூட்டணி குறித்து முடிவை கட்சியின் தலைவர் விஜய் எடுப்பார் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கரூர் சம்பவத்துக்கு பிறகு அ.தி.மு.க - பா.ஜ.க. கூட்டணியில் விஜய் இணைய வாய்ப்புள்ளதாக அரசியல் விமர்சகர்கள் பலர் தெரிவித்து வந்த நிலையில், த.வெ.கவின் பொதுக்குழு தீர்மானம் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில், மீண்டும் விஜய் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களை சந்திப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதற்காக, கட்சியில் பல்வேறு மாற்றங்களை விஜய் செய்து வருகிறார்.




இந்நிலையில், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடவுள்ள த.வெ.க. கட்சிக்கு சின்னம் ஒதுக்கக்கோரி, அக்கட்சியின் நிர்வாகிகள் டில்லியில் உள்ள தேர்தல் ஆணையத்தில் நேற்று மனு அளித்தனர். த.வெ.க. கொடுத்துள்ள பொதுவான 10 சின்னங்கள் அடங்கிய பட்டியலில் ஆட்டோ, கிரிக்கெட் 'பட்', விசில் சின்னம் இடம் பெற்றுள்ளது.

இதுதொடர்பாக த.வெ.க. நிர்வாகிகள் தெரிவிக்கையில்,

"வேட்டைக்காரன் படத்தில் விஜய் ஆட்டோ ஓட்டுவார். பைரவா படத்தில் விஜய் கிரிக்கெட் விளையாடுவார். பிகில் படத்தில் விஜய் கபடி பயிற்சியாளராக விசிலுடன் இருப்பார். அதேபோல் பிகில் படத்தில் 'கப் முக்கியம்' என்று விஜய் சொல்வார். அதனால், வெற்றிக் கோப்பை சின்னமும் கேட்டுள்ளோம். இந்த நான்கு சின்னங்களும் விஜய்க்கு மிகவும் பிடித்த சின்னமாக உள்ளன. இதில், ஏதாவது ஒரு சின்னம் தேர்தல் ஆணையம் ஒதுக்கினால், சின்னத்தை எளிதாக மக்களிடம் கொண்டு சேர்க்க முடியும்" என்றனர்.

இதற்கிடையே, பொது சின்னம் ஒதுக்கக்கோரி மக்கள் நீதி மய்யம் கட்சியும் தேர்தல் ஆணையத்திடம் விண்ணப்பித்துள்ளது.

2026 தமிழக சட்டப்பேரவை தேர்தலில் மக்கள் நீதி மய்யம் சார்பில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களுக்காக விருப்பப்பட்ட 10 சின்னங்களின் பட்டியலில் இருந்து ஒரு பொதுச்சின்னத்தை ஒதுக்குமாறு இந்திய தேர்தல் ஆணையத்திடம் மக்கள் நீதி மய்யம் சார்பில் நேற்று விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் நீதி மய்யம் கட்சியின் பிரதிநிதிகள் டில்லியில் உள்ள தேர்தல் ஆணைய அலுவலகத்தில் ஆணைய அதிகாரிகளைச் சந்தித்து, விண்ணப்பத்தை அளித்தனர்.



# 20 பேருடன் சென்ற துருக்கிய இராணுவ விமானம் அஜர்பைஜான் எல்லையில் வீழ்ந்து நொருங்கியது

அஜர்பைஜான் எல்லைக்கு அருகில் ஜோர்ஜியாவில் 20 பேருடன் சென்ற துருக்கிய இராணுவ விமானம் விபத்துக்குள்ளானதாக துருக்கியின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அஜர்பைஜானில் இருந்து நேற்று புறப்பட்ட சி -130 சரக்கு விமானம் விபத்துக்குள்ளான காரணம் மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறித்து தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இருப்பினும், துருக்கி மற்றும் அஜர்பைஜான் ஆகிய நாடுகள் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன என குறிப்பிட்டுள்ளன.

துருக்கியின் பாதுகாப்பு அமைச்சகம், விமானக் குழுவினர் உட்பட 20 துருக்கி பணியாளர்கள் சி -130 விமானத்தில் இருந்தனர் என கூறியது. ஆனால் பிற நாட்டினரைச் சேர்ந்த பயணிகள் தொடர்பில் குறிப்பிடவில்லை என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அஜர்பைஜானில் உள்ள இன்சிர்லிக் விமான தளத்திலிருந்து மேற்படி விமானம் புறப்பட்டபோது, ஜோர்ஜியாவின் காகசஸ் மலைகளில் விமானம் காணாமல் போனதாக ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது. பின்னர் அது விபத்துக்குள்ளானமை உறுதி செய்யப்பட்டது.

துருக்கிய தேசிய பாதுகாப்பு அமைச்சகம், விமானத்தில் பணியாளர்கள் உட்பட 20 துருக்கிய இராணுவ வீரர்கள் இருந்தனர் என அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது.

துருக்கிய இராணுவத்தைச் சேர்ந்த இரண்டு சிறப்பு மீட்புக் குழுக்கள், ஜோர்ஜிய அதிகாரிகளின் உதவியுடன், விபத்து நடந்த இடத்தில் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

# வெளிநாட்டு மாணவர்களைக் குறைத்தால் அமெரிக்காவில் கல்லூரிகளை மூடும் அபாயம்

## ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை



எண்ணிக்கையைக் குறைப்பது உயர் கல்வி முறைக்கு நிதி ரீதியாக அழிவை ஏற்படுத்தும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் பல்கலைக்கழகங்களுக்கு நிதி உதவி செய்வதில் வெளிநாட்டு மாணவர்களின் பங்கு முக்கியமானது.

சர்வதேச மாணவர் சேர்க்கையைக் குறைப்பது பரவலான கல்லூரி மூடல்களுக்கும், பொருளாதார இழப்புக்கும் வழிவகுக்கும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும், வெளிநாட்டு மாணவர்களை அமெரிக்காவில் படிப்பதற்கு அனுமதிப்பது, நாட்டின் உயர்கல்வி முறையை நிதி ரீதியாக வலுவாக வைத்திருக்கும் வணிக நடைமுறைக்கு நல்லது எனவும் பல அமெரிக்க பல்கலைக்கழகங்கள் தொடர்ந்து செயல்பட வெளிநாட்டு மாணவர்களை நம்பியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், “வெளிநாட்டு மாணவர்கள் இருப்பது நல்லது என்று நான் உண்மையில் நினைக்கிறேன். நான் உலகத்துடன் இணைந்து செயல்பட விரும்புகிறேன். சீனா மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை கடுமையாகக் குறைவது அமெரிக்காவில் உள்ள பாதி கல்லூரிகளை வணிகத்திலிருந்து வெளியேற்றக்கூடும்.

வெளிநாட்டு மாணவர்கள் அமெரிக்க பொருளாதாரத்திற்கு டிரில்லியன் கணக்கான டொலர்களை பங்களிக்கின்றனர். உள்நாட்டு மாணவர்கள் செலுத்துவதை விட, வெளிநாட்டு மாணவர்கள் இரண்டு மடங்கு அதிகமாகச் செலுத்துகின்றனர். நான் அவர்களை விரும்புகிறேன் என்பதல்ல, ஆனால் நான் அதை ஒரு வணிகமாகவே பார்க்கிறேன்” என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

பக்கங்கள் - 3
கனடா முரசு
புதன்கிழமை 12/11/2025

## வெளிநாட்டு குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையை குறைக்கும் கனடா

C3 ▶






# கனடாவில் தபால் சேவை முடங்கியது; ஒரு மாதத்திற்கு மேலாக பணிநிறுத்தம்

ஒரு மாதத்திற்கும் மேலாக நீடித்து வரும் கனடா தபால் ஊழியர்களின் பணிநிறுத்தத்தால், ஊழியர்களும் அந்த சேவையை நம்பும் வணிகங்களும் நிச்சயமற்ற தன்மையுடன் போராடி வருகின்றன.

வீட்டிற்கான அஞ்சல் விநியோகத்தை நிறுத்துதல் மற்றும் சுமார் 4,000 கிராமப்புற அஞ்சல் அலுவலகங்களை மூடுவதற்கான தடை உத்தரவை நீக்குதல் உள்ளிட்ட மத்திய அரசின் மாற்றங்களை எதிர்த்து கனடா அஞ்சல் ஊழியர் சங்கம் செப்ரெம்பர்பிற்பகுதியில்நாடுதழுவிய பணிநிறுத்தத்தை தொடங்கியது.

55,000 அஞ்சல் ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கனடா அஞ்சல் ஊழியர் சங்கம் , ஒக்டோபர் 11ஆம் திகதிக்குள் சுழற்சி பணிநிறுத்த முறைக்கு மாறியது.

C2 ▶

# ‘தட்டம்மை அற்ற நாடு’ என்ற அந்தஸ்த்தை இழந்தது கனடா







சுமார் மூன்று தசாப்தங்களாக பேணப்பட்டு வந்த கனடாவின் ‘தட்டம்மையை முற்றாக ஒழித்த நாடு’ என்ற அந்தஸ்து தற்போது பறிபோயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஒன்பது மாகாணங்களிலும் ஒரு பிரதேசத்திலும் 5,000 இற்கும் அதிகமான தட்டம்மை நோயாளிகள் பதிவான ஒரு பாரிய நோய் பரவல் காரணமாக இந்தக் கடுமையான பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

கனடாவின் பொது சுகாதார முகவரகம் வெளியிட்ட அறிக்கையில், நோய்ப் பரவலைத் தடுக்க, மீண்டும் தீவிரமாகத் தடுப்பூசி செலுத்து முயற்சிகளை மேற்கொள்ளுமாறு பொது மக்களை வலியுறுத்தியுள்ளது.

இந்தநிலையில், தட்டம்மை நோய் மீண்டும் பரவுவதற்குக் காரணமான காரணிகள், தடுப்பூசிகள் மீதான பொது மக்களின் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதில் உள்ள சவால்கள், மற்றும் நாடு தனது தட்டம்மை ஒழிப்பு அந்தஸ்தை மீண்டும் பெற என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து மீண்டும் அவதானம் செலுத்தப்பட வேண்டும் என நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.




# மிரட்டிப் பணம் பறித்த 3 வெளிநாட்டவர் கனடாவிலிருந்து வெளியேற்றப்பட்டனர்

பிரிட்டிஷ் கொலம்பியாவில் நடந்து வரும் மிரட்டிப் பணம் பறித்தல் தொடர்பான விசாரணையின் ஒரு பகுதியாக மூன்று வெளிநாட்டவர்களை கனடாவிலிருந்து வெளியேற்றியுள்ளதாக கனடாவின் எல்லைச் சேவைகள் முகவரகம் அறிவித்துள்ளது.

மேலும், இந்த மிரட்டிப் பணம் பறித்தல் மற்றும் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மேலும் 78 வெளிநாட்டுப் பிரஜைகள் குறித்து விசாரணைகளைத் தொடங்கியுள்ளதாகவும் அந்த முகவரகம் தெரிவித்துள்ளது.

இவர்கள் கனடாவில் அனுமதிக்க முடியாதவர்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறார்கள்.

இந்த மிரட்டிப் பணம் பறிக்கும் அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த அமைக்கப்பட்ட பணிக் குழுவில் எல்லைச் சேவைகள் நிறுவனமும் ஒரு பகுதியாகச் செயல்படுகிறது.

இந்தப் பணிக் குழுவில் பல உள்ளூர் பொலிஸ் பிரிவுகளின் அதிகாரிகள் உள்ளனர்.

குறிப்பாக, தெற்காசியச் சமூகத்தைச் சேர்ந்த வணிகங்கள் மற்றும் வணிக உரிமையாளர்களை இலக்காகக் ; கொண்ட அச்சுறுத்தல்கள் மற்றும் துப்பாக்கிச்சூடு சம்பவங்களைத் தீர்க்கவே இந்தப் பணிக் குழு உருவாக்கப்பட்டது.

வன்முறை மிரட்டிப் பணம் பறிப்பில் ஈடுபடுவோர் கைது செய்யப்பட்டு, குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவார்கள் என்றும், அவர்கள் கனடாக் குடிமக்கள் இல்லாவிட்டால், நாட்டிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்றும் பொலிஸ் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

புலம்பெயர்வு அமைப்பைத் தவறாகப் பயன்படுத்துபவர்கள் மற்றும் சமூகத்தின் பாதுகாப்பைக் குலைப்பவர்களை விரைவாக வெளியேற்றுவதில் கவனம் செலுத்தப்படும் என்றும் எல்லைச் சேவைகள் முகவரகம் தெரிவித்துள்ளது.

# பீல் பிராந்தியத்தில் துப்பாக்கிச் சூடு; சந்தேகநபர் பிராம்ப்டனில் கைது

கனடாவின் பீல் பிராந்தியத்தில் நடந்த இரு கப்பம் கோரல்களுடன் சம்பந்தப்பட்ட துப்பாக்கிச் சூடுகள் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மற்றொரு சந்தேகநபர் இன்னும் தேடப்பட்டு வருகிறார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முதல் சம்பவம் ஒக்டோபர் 26 அன்று கலிடன் பகுதியில் உள்ள ஓல்ட் ஸ்கூல் ரோடு மற்றும் கிரெடிட்வியூ ரோடு அருகே, ஹைவே 10 இன் மேற்கு பக்கத்தில் நடைபெற்றது.

அந்த நாளில் அதிகாலை 3 மணிக்கு முன், வெள்ளி நிற பி.எம்.டபிள்யூ வாகனத்தில் வந்த இரு சந்தேக நபர்கள் ஒரு வீட்டின் முன்புறம் வந்தனர் என கூறப்படுகிறது.

கண்காணிப்பு காட்சிகளில், அவர்களில் ஒருவர் வீட்டு வாசலில் எரிவாயுவை விசிறி தீ வைத்தனர். பின்னர் இருவரும் அந்த வீட்டின் மீது பல துப்பாக்கிச் சூட்டுகள் நடத்தியமை பதிவாகியுள்ளதாக விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.



சில நேரத்திற்குப் பிறகு, அதே இரு சந்தேகநபர்கள் பிராம்ப்டன் நகரில் உள்ள டிக்சி ரோடு மற்றும் அட்வான்ஸ் புளூவர்ட் அருகே அமைந்துள்ள ஒரு வணிக நிறுவனத்திற்கும் சென்றனர் என கூறப்படுகிறது.

அங்கு வாகனத்திலிருந்தே ஒரு நபர் நிறுவனத்தின் மீது பல துப்பாக்கிச் சூட்டுகளை நடத்தினார் என பொலிஸார் கூறினர். இரு சம்பவங்களிலும் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

நவம்பர் 7 அன்று பிராம்ப்டனில் வசிக்கும் 25 வயதான இக்பால் பாக்ரியா கைது செய்யப்பட்டார். இந்த சம்பவங்கள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## கனடாவில் தபால்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் பெரும்பாலான இடங்களில் அஞ்சல் சேவை மீட்கப்பட்டது.

அத்துடன் பழங்குடி சமூகங்களுக்கு அஞ்சல் சேவை ஒரு 'உயிர்நாடி' என்பதால், இந்தத் தாமதங்கள் அவர்களுக்கு மிகத் தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையை குறைக்கும் கனடா





வெளிநாடுகளிலிருந்து வரும் குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை குறைப்பதற்கு கனடா அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தன் முதற் கட்டமாக அடுத்த ஆண்டில், 385,000 பேருக்கே கனடாவுக்குள் நுழைய அனுமதி வழங்கப்படவுள்ளது. இவர்களுக்கு தற்காலிக குடியிருப்பு அந்தஸ்துகளே வழங்கப்படவுள்ளன.

கனடாவில் ஏற்கனவே குடிபுகுந்துள்ள தற்காலிக குடியிருப்பாளர்களுக்கு நிரந்த வதிவிடம் வழங்கும் நோக்குடனே,புதிதாக வருவோரின் தொகையை மட்டுப்படுத்த கனடா அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது கடந்த சில ஆண்டுகளில் காணப்பட்ட அதிக எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது கணிசமான அளவு குறைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நிரந்தர வதிவிட வசதிகள் வழங்கப்பட்ட பின்னர்,எதிர்காலத்தில் கனடாவின் குடியேற்ற கொள்கையில் இறுக்கமான கட்டுப்பாடுகள் கொண்டு வரப்படவுள்ளன.

கனடாவில் சர்வதேச மாணவர்களின் வருகை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 60 சதவீதம் குறைந்துள்ளது. கடந்த 2024 ஆண்டு புகலிடக் கோரிக்கைகளுக்காக விண்ணப்பித்தோர் தொகை, இவ்வாண்டில் மூன்றிலொரு பங்காக குறைந்துள்ளது.

இவ்வாறுள்ள நிலையில்,எதிர்வரும் மூன்றாண்டுகளில் 380,000 வெளிநாட்டினர்களுக்கு நிரந்தரவதிவிடங்களை வழங்க கனடா அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.